தந்தை பெரியார் என்ன எண்ணினாரோ, அவர் என்ன வண்ணத்தில் உடை உடுத்தினாரோ, அந்தக் கருப்பாடையை தனது பிறந்த நாளன்று உடுத்திய

# ஓர் இளம் பெரியார் உதயநிதியைத் தந்ததற்காக, தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோடானு கோடி நன்றி!

## திருவண்ணாமலை இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பில் – அமைச்சர் எ.வ.வேலு உரை !

திருவண்ணாமலை,டிச.19-

**“தந்தை பெரியார் என்ன எண்ணினாரோ, அவர் என்ன வண்ணத்தில் உடை உடுத்தினாரோ, அந்தக் கருப்பாடையை தனது பிறந்த நாளன்று உடுத்திய ஓர் இளம் பெரியார் உதயநிதியை தந்ததற்காக, தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.**

இம்மாபெரும் நிகழ்வில் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எட்டுகோடி தமிழர்களின் இதய வேந்தரும் - ஒட்டுமொத்த கழகத்தின் உதயசூரியனுமாக இருக்கும் கழகத் தலைவர் - திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் - என் நெஞ்சமெல்லாம் நிறைந்தி ருக்கும் என்னுடைய அன்புத் தலைவர் - நாட்டு மக்களின் நம்பிக்கைக்குரியவர் - நல்லாட்சியின்மூலம்நன்மைசெய்பவர்-மக்களிடம் அளவு கடந்த அன்பைக் கொண்டவர் - மக்களைக் கண்டால் நடப்போம் என்ற தெம்பு கொண்டவர் - ஊர்தோறும் உலா வருபவர் - உண்மைத் தொண்டர்களுக்கு ஊன்றுகோலாய் திகழ்பவர் - கழகம் கட்டுண்டு நிற்பதற்கு அவர் ஒருவரே காரணமாய் இருப்பவர் - ஏழைகளின் ஏந்தலாய் திகழ்பவர் - ஏன், தமிழ்நாட்டுக்கே தாயுமானவராக இருந்து, இன்றைக்கு தாயாக இருந்து, நாட்டு மக்களைக் காக்கும் நம்முடைய அண்ணன் தளபதியார் அவர்களை இந்த மண்டலத்தின் சார்பாக வருக... வருக... வருக என்று அவரை நான் வரவேற்கிறேன்.

### அவரே உதயநிதி – எங்கள் இதயநிதி!

இந்த வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு என்றாலும், இங்கிருக்கும் ஒவ்வொரு வடக்கு மண்டல கழக இளைஞர்கள் எல்லாம், இந்தத் திருவண்ணாமலை தேர்தலில் நம்முடைய இளைஞரணிச் செயலாளரின் மண்டல மாநாடு நடைபெறுகிறது என்ற அடிப்படையில், இங்கே தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் இளைஞர்களின் எழுச்சி நாயகரே - நாளைய தமிழ்நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமே - தமிழர்களின் அடையாளமே - கழகத்தின் கருவூலமே எங்கள் உதயநிதியே - ஒற்றை செங்கல்லை வைத்துக் கொண்டு ஊரையே திரட்டியவரே - அதையே கழக வேட்பாளருக்கு ஓட்டாக மாற்றியவரே - தேர்தல் களத்தில் அவரின் சூறாவளி சுற்றுப் பயணம், இங்கிருக்கும் இளைஞர்களை சுறுசுறுப்பாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை - மாண்புகளுக்கெல்லாம் மாண்பானவர் - மாட்சிமைத் தங்கிய துணை முதல்வர் - மடமைகளை ஒழித்திடும் மாமனிதர் - கடமைகளை அன்றாடம் கச்சி தமாய் செய்பவர் - தமிழ் நிலம் காத்திடும் தன்னிகரில்லா அன்பரே - தமிழர்களை அன்பினால் ஆட்கொண்டவரே - நானிலம்போற்றும்நல்லவரே-வல்லவரே - நாட்டின் தேவையறிந்து நாட்டாமை செய்பவரே - அவரே உதயநிதி - எங்கள் இதயநிதி - அவர் வழியில் தேர்தல் உத்தி நாடுவோம் - ... வீர நடை போடுவோம் - இளவல் உதயநிதி அவர்களே... இந்த மண்டல மக்கள் அத்தனை அனைவரின் சார்பாக - ஏன், இந்த மண்டலத்தில் இருக்கும் இளைஞரணி தம்பிமார்கள் சார்பாக உங்களை வருக... வருக... வருக என்று நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

### தனது பிறந்த நாளன்று கருப்பாடையை உடுத்தியவர்!

நான் ஒருவரியில் ஒன்றைச் சொல்லி நிறைவு செய்கிறேன். பொதுவாக ஒருவரின் பிறந்த நாள் என்று சொன்னால், வெள்ளாடை உடுத்திக் கொள்ளலாம் என்று கருதுவார்கள். இன்னும் கொஞ்சம் ஆன்மீகவாதியாக இருந்தால், மஞ்சள் ஆடை உடுத்திக் கொள்ளலாம் என்று கருதுவார்கள். இன்னும் கொஞ்சம் மென்மையானவர்களாக இருந்தால், அவருக்கு பிடித்த உடையை அணிந்து கொள்ளலாம் என்று கருதுவார்கள். இந்த ஆண்டு அவருடைய பிறந்த நாள் விழாவில், அவர் உடுத்திய ஆடை, தந்தை பெரியார் என்ன எண்ணினாரோ, அவர் என்ன உடுத்தினாரோ, அந்தக் கருப்பாடையை உடுத்தி, அவர் அனைவரையும் பிறந்த நாள் விழா அன்று பார்த்தார்.

### ஐந்தாம் தலைமுறையாகியிருக்கும் நம்முடைய இளவல் தளபதி உதயநிதி!

எனக்கு என்ன நினைவூட்டுகிறது என்று சொன்னால், நான் எப்போதும் சொல்வதைப் போன்று, திராவிட இயக்கம்



என்பது 5 தலைமுறைக்கு வந்திருக்கிறது. முதல் தலைமுறை - தந்தை பெரியார்; இரண்டாம் தலைமுறை - பேரறிஞர் அண்ணா; மூன்றாம் தலைமுறை - என் நெஞ்சமெல்லாம் நிறைந்தி ருக்கும் அன்புத் தலைவர் கலைஞர்; நான்காம் தலைமுறை - நற்றமிழ் நாயகர் - தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் - என் அண்ணன் தளபதி. இந்த இயக்கத்தை தமிழ்நாட்டிற்கு இன்னும் 50 ஆண்டு காலத்திற்கு அழைத்துச் செல்வதற்கு ஐந்தாம் தலைமுறையாகியிருக்கும் நம்முடைய இளவல் தளபதி உதயநிதி.

### இளம் பெரியார் உதயநிதியை தந்ததற்காக தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோடானு கோடி நன்றி!

அவர் பிறந்த நாள் அன்று கருப்பாடை அணிந்திருந்தார். எங்களைப் போன்றவர்கள் எல்லாம் பூரித்துப் போனோம். அண்ணன் அவர்களே, நான் எவ்வாறு மகிழ்ச்சியாக சொல்லலாம் என்று கருதுகிறேன். அவ்வாறு சொன்னால் இயக்கம் மகிழும் என்று கருதுகிறேன். எங்களுக்கு ஒரு இளம் பெரியார் உதயநிதியை தந்ததற்காக, அண்ணன் அவர்களே... தமிழ்நாடு முதலமைச்ச ருக்கு கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மேடையில் சிறப்பு சேர்த்துக் கொண்டிருக்கும், இந்த மண்ணின் மைந்தர் - எங்கள் மாவட்டத்தின் மூத்தவர் - பொதுச் செயலாளர் அண்ணன் துரை முருகன் அவர்களையும் வருக... வருக... வருக என்று நான் வரவேற்கிறேன். அதைப் போன்று, முதன்மைச் செயலாளர் - அருமை அண்ணன் நேரு அவர்களையும் வருக... வருக என்று வரவேற்கிறேன். துணைப் பொதுச் செயலாளர்கள்: அருமை அண்ணன் இ. பெரியசாமி, அண்ணன் பொன்முடி, ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், மு.பெ. சாமிநாதன் போன்ற அருமை அண்ணன்மார்களை எல்லாம் வருக... வருக என்று நான் வரவேற்கிறேன்.

அதனைத் தொடர்ந்து, நம்முடைய தலைமைக் கழகத்தின் நிர்வாகிகள் நம்முடைய வழக்கறிஞர் சகோதரர் இளங்கோ, ஆஸ்டின், அன்பகம் கலை, தாயகம் கவி போன்றவர்களையும் அன்போடு அழைக்கிறேன்.

இந்த நிகழ்வு வெற்றி பெற்றதா? இல்லையா? என்பதை, தலைமைப் பொறுப் பேற்றிருக்கும் தம்பி அவர்களும், நிறைவாக உரை நிகழ்த்த இருக்கும் அண்ணன் தளபதியாரும்தான் எடை போட வேண்டும். ஆனால், இது நிறைவு பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதற்கெல்லாம் காரணமானவர்கள் இந்தப் பகுதியில் பொறுப்பு அமைச்சராக இருந்து பணியாற்றி இருக்கும், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அன்பரசன், இராசேந்திரன், சக்கரபாணி, காந்தி, மா. சுப்பிரமணியன், சேகர்பாபு, நாசர் ஆகியோர் என்னோடு சேர்ந்து இந்த மாநாட்டிற்கு உதவியாக இருந்த அந்த அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேரையும் வருக... வருக என்று நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதனைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, இந்தப் பகுதியில் இருக்கும் நம்முடைய திராவிட ஆழ்வார் ஜெகத்ரட்சகன், அருமை நண்பர் தயாநிதி மாறன், ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டச் செயலாளர்கள்: மஸ்தான், சிவலிங்கம், செல்வ கணபதி, பழனியப்பன், வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன், தேவராஜ், சிற்றரசு, சுந்தர், ஏ.பி. நந்தகுமார், பிரகாஷ், லட்சுமணன், ஆ. மணி, மதியழகன், சுதர்சனம், ஆர்.டி. சேகர், டி.எம். கதிர் ஆனந்த், பொன். கௌதம சிகாமணி, மயிலை த. வேலு, ரமேஷ் ராஜ், சந்திரன் போன்ற மாவட்டச் செயலாளர்களையும் இந்த நிகழ்வின் மூலமாக வருக... வருக என்று நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் கலந்து கொண்டிருக்கும் ஏனைய சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் - மாவட்ட இளைஞரணி தம்பிமார்கள் - துணை அமைப்பாளர்கள் - நம்முடைய இளைஞரணியைச் சேர்ந்த ஒன்றிய - நகரச் செயலாளர்கள் அத்தனை பேரையும் வருக... வருக என வரவேற்கிறேன்.

### ‘தம்பி உடையான் படைக்கு அஞ்சான்!’

ஒரு வார காலமாக நம்முடைய இளைஞரணிச் செயலாளரின் அறிவுரையை - ஆலோசனையைக் கேட்டு, என்னோடு இந்த ஒரு வார காலமாக செயல்பட்ட ‘தம்பி உடையான் படைக்கு அஞ்சான்’ என்பதைப் போன்று, நம்முடைய இளவல் உதயநிதியின் தம்பியாக இருந்து, பணிகளைச் சிறப்பாகச் செய்த மாநில இளைஞரணியின் துணை அமைப்பாளர்கள்: ஜோயல், ரகுபதி (எ) ரகு, இளைய ராஜா, அப்துல் மாலிக், பிரகாஷ், பிரபு, சீனிவாசன், ராஜா, ஆனந்த குமார் ஆகியோரையும், திருவண்ணா மலை மாவட்டத்தின் வடக்கு - தெற்கு நிர்வாகிகள் அத்தனை பேரையும் நான் வருக... வருக என்று வரவேற்று, மீண்டும் ஒரு முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களே - என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அன்பு அண்ணன் அவர்களே... ஒரு இளம் பெரியாரை எங்களுக்கு தந்ததற்காக உங்களுக்கு கோடான கோடி நன்றியைச் சொல்லி, வந்திருக்கும் நம்முடைய இளைஞரணி தம்பிமார்கள் அத்தனை பேரையும் மீண்டும் ஒரு முறை வருக... வருக... வருக என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

---

‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்’ பெயர் மாற்றம்!

## ஒன்றிய அரசு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு!

### ‘’தினகரன்’’ நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, டிச. 19–

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை ஒன்றிய அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது. இம்முடிவை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென மக்கள் எதிர்பார்ப்பதாக “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–



தினகரன்

டிசம்பர் 18, 2025 வியாழக்கிழமை

மாற்றம் - ஏமாற்றம்

மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது தொடங்கப்பட்டது 100 நாள் வேலை திட்டம். பிப்.2, 2006ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. கிராமப்புறங்கள் வளர்ச்சியே உண்மையான வளர்ச்சி என அரும்பாடுபட்டவர் காந்தியடிகள். எனவே, அவரது பெயரால் இத்திட்டமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என அக்.2, 2009ம் தேதி முதல் பெயர் மாற்றப்பட்டது. நாடு முழுவதும் 11.92 கோடி பேர், இத்திட்டத்தின் கீழ் தொழிலாளர்களாக பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் சுமார் 90 லட்சம் பேர் பயனாளிகளாக உள்ளனர்.

ஒரு நாளைக்கு ஒரு மணி நேர உணவு இடைவேளையுடன் 8 மணி நேரம் பணியாற்ற வேண்டும். தின ஊதிய அடிப்படையில் இந்த வேலை நிர்ணயிக்கப்படும். பாஜ ஆட்சிக்கு வந்த பின் இத்திட்டத்திற்கான நிதி, ஆண்டுதோறும் பட்ஜெட்டில் குறைக்கப்பட்டே வந்தது. தற்போது இத்திட்டத்தில் மகாத்மா காந்தியடிகளின் பெயரை நீக்கியதோடு, மேலும் பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் மசோதாவை மக்களவையில் பாஜ

மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது தொடங்கப்பட்டது 100 நாள் வேலை திட்டம். பிப்.2, 2006ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. கிராமப்புறங்கள் வளர்ச்சியே உண்மையான வளர்ச்சி என அரும்பாடுபட்டவர் காந்தியடிகள். எனவே, அவரது பெயரால் இத்திட்டமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என அக்.2, 2009ம் தேதி முதல் பெயர் மாற்றப்பட்டது. நாடு முழுவதும் 11.92 கோடி பேர், இத்திட்டத்தின் கீழ் தொழிலாளர்களாக பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் சுமார் 90 லட்சம் பேர் பயனாளிகளாக உள்ளனர்.

ஒரு நாளைக்கு ஒரு மணி நேர உணவு இடைவேளையுடன் 8 மணி நேரம் பணியாற்ற வேண்டும். தின ஊதிய அடிப்படையில் இந்த வேலை நிர்ணயிக்கப்படும். பா.ஜ. ஆட்சிக்கு வந்த பின் இத்திட்டத்திற்கான நிதி, ஆண்டுதோறும் பட்ஜெட்டில் குறைக்கப்பட்டே வந்தது. தற்போது இத்திட்டத்தில் மகாத்மா காந்தியடி களின் பெயரை நீக்கியதோடு, மேலும் பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் மசோதாவை மக்களவையில் பா.ஜ. அரசு தாக்கல் செய்துள்ளது.

இத்திட்டத்திற்கு வளர்ந்த இந்தியா வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான உத்தரவாத திட்டம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இதனை சுருக்கமாக வி.பி.ஜி. ராம்ஜி என குறிப்பிடுகின்றனர். காந்தியடிகளின் பெயரிலான திட்டத்தின் பெயரை மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, காந்தியின் புகைப்படங்களுடன் அவையின் மையப்பகுதியை முற்றுகையிட்டு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு முன் இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசே நிதி வழங்கி வந்தது. இந்த புதிய மசோதாவின்படி, 40 சதவீத பங்களிப்பை மாநில அரசு வழங்க வேண்டும். இது ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மாநிலங்களுக்கு மேலும் நிதிச் சுமையை ஏற்படுத்தும்.

கிராம மக்களுக்கான வேலை வாய்ப்பு உரிமை பறிக்கப்படும் என்பது எதிர்க்கட்சிகளின் கருத்து. காந்தியடிகள் பெயரை நீக்கியதை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போராட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில், கிராம மக்களின் வேலைவாய்ப்பு பறிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, அடுத்தடுத்து எதிர்க்கட்சிகள் போராட்டங்களை அறிவித்துள்ளன. இத்திட்டம் ஒன்றிய அரசின் பங்களிப்போடு, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து விரிவாக்கம் செய்யப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி தங்களது எதிர்ப்பை காட்டுகின்றனர். ஒன்றிய அரசு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாட்டில் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது!

*சென்னை, டிச. 19-*

*தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. S.I.R. படிவங்களை சமர்ப்பிக்கும் காலம் முடிவடைந்த நிலையில், வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடுகிறது.*

*இணையதளத்தில் வெளியிடப்படும் பட்டியலில் பொதுமக்கள் தங்களது பெயர்களை சரிபார்த்து கொள்ளலாம். உயிரிழந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்கள், கண்டுபிடிக்க முடியாதவர்கள் என மொத்தம் 80 லட்சத்துக்கும் அதிகமானோர் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படலாம் என கூறப்படுகிறது.*

*இரட்டைப்பதிவு வாக்காளர்கள் விவரங்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் இணையதளங்களில் வழங்கப்படும் என்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சன பட்நாயக் தெரிவித்துள்ளார்.*

---

திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் புதுப்பிக்கத்தக்க

## எரிசக்தி சேமிப்புத் திட்டங்களுக்கு ஆய்வு செய்யப்படுமா?

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

*புதுடெல்லி, டிச. 19-*


*திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்புத் திட்டங்களுக்கு ஆய்வு செய்யப்படுமா என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.*

*பசுமை ஹைட்ரஜன் திட்டங்களின் விரிவாக்கம் தொடர்பான அவரது கேள்வி வருமாறு:-*

*புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் மகிழ்ச்சியுடன் கூறுவார்:*

*(அ) நாடு முழுவதும் பசுமை ஹைட்ரஜன், கடல் காற்று மற்றும் சேமிப்புடன் இணைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை பெரிய அளவில் விரிவுப்படுத்த அரசாங்கம் முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள்;*

*(ஆ) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்*



*றாக தமிழ்நாடு இருப்பதால், பசுமை ஹைட்ரஜன் மையங்கள், கடல் காற்றாலைகள் அல்லது எரிசக்தி சேமிப்பு வசதிகளை நிறுவுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்;*

*(இ) திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் இதுபோன்ற பசுமை ஹைட்ரஜன் அல்லது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பு திட்டங்களுக்கு ஏதேனும் திட்டங்கள் அல்லது சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அப்படியானால்,*

*இந்த முயற்சிகளின் தற்போதைய நிலை; மற்றும்*

*(ஈ) அத்தகைய திட்டங்களை நிறைவு செய்வதற்கும் விரிவுபடுத்துவதற்கும் அரசாங்கம் ஏதேனும் காலக்கெடு அல்லது செயல்திறன் மைல்கற்களை நிர்ணயித்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?*

*புதிய மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மற்றும் மின்சாரத்திற்கான இணைய மைச்சர் இதற்கு பதிலளித்தார்.*



சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் அரசு கல்லூரியில், ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.மனோகரன், ஏ.எஸ்.மதியழகன், பேரூர்க் கழக பொறுப்பாளர் ஏ.கே. ஜெயச்சந்திரன், பரங்கிப்பேட்டை முன்னாள் பெருந்தலைவர் கருணாநிதி, ஒன்றிய துணைச் செயலாளர் இளவரசன், செல்வகுமார், சுப்பு, இளைஞரணி நடராஜன், அரவிந்தன், நித்திஷ், புருஷோத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு மருத்துவர்கள், மருத்துவ பயனாளிகள் கலந்து கொண்டனர்.